பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில், அதிகபட்ச புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளை, தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகத் தேர்வொன்றிற்கு உட்படுத்தியதன் பின்னர் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

02. **தேவையான அடிப்படைத் தகைமைகள்:**

2.1 *கல்வித் தகைமைகள்*

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியல் அல்லது விலங்கியல் அல்லது தாவரவியல் பற்றிய விசேட பட்டத்துடன் இரசாயனவியல் அல்லது விலங்கியல் அல்லது தாவரவியல் பற்றிய பட்டப்பின் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியல், விலங்கியல் உ-ம். - தாவரவியல் பாடங்கள் கொண்ட சாதாரண பட்டத்துடன் இரசாயனவியல் அல்லது விலங்கியல் அல்லது தாவரவியல் பற்றிய பட்டப்பின் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

2.2 *தேக ஆரோக்கியம்:*

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராதல் வேண்டும்.

2.3 பிற தகைமைகள்

* விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.
* விண்ணப்பதாரர்கள் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியன்று தேவைப்படும் அனைத்து தகைமைகளையும் விண்ணப்பதாரர்கள் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

03. **வயதெல்லை:**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் வயது 21 வருடங்களுக்கு குறையாமலும், 35 வருடங்களுக்கு மேற்படாதவராவும் இருத்தல் வேண்டும்.

04. **சம்பளப் பரிமாணம்:**

25-02-2016 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் உப அட்டவணை 1 இன் படி இப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பளப் பரிமாணம் ரூ. 36,585 – 10×660 – 11×755 – 15×930 – 65,440 (MN 06 - 2006(ஏ)) ஆகும்.

05. **எழுத்துப் பரீட்சை:**

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடத் திட்டம் | நேரம் | உச்ச புள்ளிகளின் அளவு | தேர்ச்சிப் புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | சொற்கள் மற்றும் உருவ அமைப்புக்களாக முன் வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பரீட்சார்திகள் எடுக்கும் முடிவுகள் மற்றும் வழங்கின்ற பதில்களின் அடிப் படையில் குறித்த சிக்கல்கள் பற்றிய கிரகிப்புத்திறன், கணிப்பீடு மற்றும் நேரம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவற்றுக் கிடையேயான தொடர்புகளை புரிந்து கொள்வதில் பரீட்சார்த்தி கொண்டு ள்ள திறமையினை அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

